**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No.113 / 2013 |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for Court | Petitioner Respondent | அ.சா.1 |
| Name | : | திருமதி.வசந்தா |
| Father's/Husband Name: | | திரு.நடராஜன் |
| Village | : | வடக்கலூர் |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 53 /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 19.12.2023.

**( எதிரி ஆஜர்.)**

**மனுவில் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை அனுமதிக்கப்படுகிறது :–**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

01. புகார் மற்றும் 161 வாக்குமூலத்திலும் நான் சிங்காப்பூரில் எந்த முகவரியில் தங்கியிருந்தேன் என்பதைப்பற்றியும், எந்தளந்த காலகட்டத்தில் யார், யார் எனக்கு வேலை தந்தார்கள் பற்றியும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சிங்காப்பூரில் சென்றதாக கூறுவதையும், அங்கு வேலை செய்ததாக சொல்வதையும் நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் போலீசாரிடமோ, நீதிமன்றத்திலோ தாக்கல் செய்தேனா என்றால் போலீசாரிடம் கொடுத்தேன். நான் ஆவணம் தாக்கல் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரை உள்ள ஆவணங்களில் கூறப்படும் தொகையை நான் தான் எதிரிக்கு அனுப்பினேன் என்பதற்கு போலீசாரிடமோ, நீதிமன்றத்திலோ தாக்கல் செய்தேனா என்றால் போலீசாரிடம் கொடுத்தேன்.

02. நான் ஆவணம் தாக்கல் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரை உள்ள ஆவணங்களில் பணம் அனுப்பிய ராஜாதேவி, நளினி, குணாளன் ஆகியோர் எதிரியிடம் கடன் பெற்று சிங்கப்பூர் சென்ற நபர்கள் என்றால் அவர்கள் சிங்கப்பூரை சேர்ந்தவர்கள். எதிரியிடம் அவர்கள் கடன் வாங்கவில்லை. எதிரியிடம் வாங்கிய கடனை தான் ராஜாதேவி, நளினி, குணாளன் ஆகியோர் எதிரிக்கு அனுப்பியுள்ளார்கள் என்றால் நான் அவர்கள் வீட்டில் வேலை செய்தேன்.

03. நான் சொன்னதால் தான் எதிரிக்கு அவர்கள் பணம் அனுப்பினார்கள். ராஜாதேவி, நளினி, குணாளன் ஆகியோரிடம் பணி செய்ததாகவும், நான் அவர்கள் மூலம் பணம் அனுப்பியதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிப்ரவரி 2008 முதல் ஜனவரி 2009 வரை எதிரியின் வீட்டில் வேலை செய்தேன் என்றால் இல்லை. 30.01.2009 ம் தேதி எதிரியின் வீட்டில் இருந்து முக்கிய ஆவணங்கள் ரொக்கம் ரூ.2,00,000/- ஆகியவற்றை எதிரிக்கு தெரியாமல் எடுத்து சென்றுவிட்டேன் என்றால் நான் அவர் வீட்டிற்குள் செல்லவில்லை. எதையும் எடுக்கவில்லை.

04. இவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் வீட்டில் இருந்து அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரை உள்ள ஆவணங்களை திருடி வந்து அதை தவறாக பயன்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.ஆ.11 ஆவணங்கள் லப்பைக்குடிகாட்டில் டாலரை ரூபாயாக மாற்றியதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் டாலராக கொண்டுவரவில்லை. வருவதற்கு முதல் நாள் எதிரிக்கு அனுப்பினேன். டாலரை ரூபாயாக மாற்றியதற்கான ஆவணங்கள் போலிசாரிடமோ, நீதிமன்றத்திலோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

05. அ.சா.ஆ.12 சீதா என்பவர் டாலரை பணமாக மாற்றி எதிரியிடம் கொடுத்தார் என்பதற்கான ஆவணமும் போலிசாரிடமோ, நீதிமன்றத்திலோ தாக்கல் செய்யவில்லை என்றால் அசல் ஆவணங்கள் அனைத்தும் தாக்கல் செய்துள்ளேன். 25.01.2008 ம் தேதிக்கு பிறகு டாலரை மாற்றி எதிரிக்கு பணமாக கொடுத்ததாக புகாரிலோ, விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். 26.11.2006 ல் எம்.அண்ணாதுரை மூலம் எதிரியிடம் ரூ.50,000 அனுப்பிவைத்ததாகவும், 24.01.2008 ம் தேதி சீதா மூலம் டாலரை மாற்றி எதிரிக்கு பணமாக அனுப்பியதையும் புகாரிலோ,

விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

06. புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் சொன்னதை காவல் நிலைய எழுத்தார் எழுதினார். புகாரை யாரிடம் எங்கு கொடுத்தேன் என்றால் பூமிநாதன் என்ற போலீசாரிடம் மங்களமேடு காவல் நிலையத்தில் வைத்து கொடுத்தேன். குருந்தங்குடி சண்முகம் மூலம் பவுன், நகை கொடுத்தாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் கொடுத்தது உண்மை. நான் நகைகள் வாங்கி கொடுத்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நகையை நான் தான் அனுப்பினேன்.

07. ஆனால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. குவைத் செல்வதற்கு 40,000 பணம் மற்றும் சிங்கப்பூர் செல்வதற்கு 35,000 பணமும் எதிரியிடம் கடன் வாங்கியதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கடனை எதிரிக்கு வட்டியுடன் செலுத்தியதற்கு எந்த ஆதாரமும் போலீசாரிடமோ, நீதிமன்றத்திலோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கடனை எதிரி திருப்பி கேட்டதால் அதை ஏமாற்றுவதற்காக எதிரியின் மீது பொய்யான புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

08. நான் குவைத் சென்றது எதிரிக்கு தெரியும். ஆனால் நான் சிங்கப்பூர் சென்றது எதிரிக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் எந்த காலகட்டத்திலும் யார் மூலமாகவும் எதிரிக்கு எந்த தொகையும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த காலகட்டத்திலும் யார் மூலமாகவும் எதிரிக்கு எந்த நகையையும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. ராஜாதேவி, நளினி, குணாளன் , சண்முகம் ஆகியோரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் ராஜாதேவி, நளினி, குணாளன் சிங்கப்பூரில் வசிப்பவர்கள். சண்முகம் சிங்கப்பூர் அவ்போது சென்று வருபவர். எதிரிக்கு என்னுடைய பணத்தை தான் அனுப்பிவைத்தேன் என்பதற்கு ராஜாதேவி, நளினி, குணாளன் ஆகியோரிடம் ஆவணம் எதுவும் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

09. எதிரியின் மனைவி ஒன்றிய குழு உறுப்பினராக உள்ளார் என்றால் கவுன்சிலராக உள்ளார். நான் 2001ல் எடுத்த பாஸ்போர்ட் 2011 ஆண்டு வரை செல்லும் என்றால் சரிதான். ஒரே நேரத்தில் இரண்டு பாஸ்போர்ட் வைத்துக்கொள்ள கூடாது என்பது தெரியும் என்றால் சரிதான். போலீசார் எந்த இடத்தில் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் மறுநாள் மாலை மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். புகாரிலோ, நீதிமன்ற விசாரணையில் சொல்லயுள்ளவாறு எந்த சம்பவமும்

நடக்கவில்லை என்றாலும் எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.

Sd/-
Judicial Magistrate
Additional Mahila Court,
Perambalur.